செய்தி வெளியீடு எண்: 874 நாள்: 18.10.2008

# பத்திரிக்கைச் செய்தி

சென்னை மாவட்ட உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையில் 17/10/2008 அன்று சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழு கூட்டம் ஆணையாளர் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவர், திரு. க. ராஜாராமன், இஆப தலைமையில் நடத்தப்பட்டது. இக்கூட்டத்தில் உணவு பொருள் வழங்கல் துறையின் துணைஆணையாளர்கள் திரு.சி.கோதண்டன், திரு. சொ. சண்முகநாதன், திரு.கே.சாந்தகுமார் மற்றும் நுகர்வோர் சேவையில் முன்னோடியாகத் திகழும் சென்னை மாவட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்பினர்கள் மற்றும் நுகர்வோர் சேவை தொடர்புடைய அரசுத் துறை / சார்பு நிறுவனங்களாகிய போக்குவரத்து துறை, சென்னை மாநகராட்சி, சென்னை மாநகர போக்குவரத்து கழகம், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மருந்துக் கட்டுப்பாட்டுத்துறை, மருத்துவம் மற்றும் ஊரக பணிகள் துறை, பொது சுகாதாரம் மற்றும் நோய்த்தடுப்புத் துறை, தொழிலாளர் மற்றும் எடை அளவு கட்டுப்பாட்டுத்துறை, காவல்துறை, இந்தியன் / இந்துஸ்தான் / பாரத் ஆயில் கார்ப்பரேசன் ஆகியவற்றின் உயர் அலுவலர்கள் / பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இக்கூட்டத்தில் நுகர்வோர் சந்திக்கும் பல்வேறான அத்தியாவசிய புகார்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட்டதோடு கீழ்க்கண்ட முக்கிய பிரச்சனைகள் மீது துரித நடவடிக்கை எடுத்திட சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவர் & உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையாளரால் கேட்டுக்கொள்ளப்பட்டது.

1. சென்னைபுறநகர் மற்றும் பிற நகராட்சி பகுதிகளில் உள்ள டீ கடைகளில் கலப்பட தேயிலை பயன்படுத்தப்படுவதாகவும் இது தொடர்பாக தீவிர ஆய்வு மேற்கொண்டு தவறு செய்பவர்கள் மீது எச்சரிக்கை செய்து விட்டுவிடாமல், இந்திய தண்டனை சட்டம் மற்றும் உணவு கலப்பட சட்டம் ஆகியவைகளின் கீழ் நடவடிக்கை எடுக்க நகராட்சி நிர்வாக ஆணையரை கேட்டுக் கொள்ளப்பட்டது.
2. வெளிநாட்டு உணவுப் பொருட்கள் மற்றும் மிட்டாய் வகைகள் விற்பனையை முறைப்படுத்த உணவு கலப்பட தடைச் சட்டம் மற்றும் பொட்டலமிடப்பட்ட பொருட்கள் சட்டம் ஆகியவற்றின் கீழ் தீவிரமாக நடவடிக்கை எடுக்க தொழிலாளர் துறை கேட்டுக் கொள்ளப்பட்டது. மேலும் இவ்வாறான உணவு பொருட்களை வாங்கும் போது நுகர்வோர்கள் கவனிக்க வேண்டிய அம்சங்கள் என்னென்ன என்பது குறித்து பத்திரிக்கை செய்தி வாயிலாக விளம்பரப்படுத்த சுகாதாரத் துறை கேட்டுக் கொள்ளப்பட்டது. தவிர பொருட்களின் மீது பொட்டலமிடப்பட்ட பொருட்கள் சட்டத்தின் கீழ் தரவேண்டிய விபரங்கள் இல்லை என்ற காரணத்தினால் அச்சட்டத்தின் கீழும் நடவடிக்கை எடுக்கவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

ks

3. எரிவாயு உருளை வழங்கலில் குறிப்பாக சிலிண்டர் டெலிவரி செய்யும் பணியாளர்கள் கூடுதலாக பணம் கேட்பது போன்ற பல புகார்கள் வருவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இலவச தொலைபேசி வசதி மூலம் புகார்தாரர் தனது புகாரினை கீழ்க்கண்ட எண்ணெய் நிறுவன எண்களில் பதிவு செய்ய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

IOC 1800 – 233555

BPC 1800 – 222725

HPC 1800 - 233777

4. குழந்தைகளுக்கான பொம்மைகளில் மெலமின் என்கிற நச்சுப் பொருள் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பொருட்கள் எவையென கண்டறிந்து அந்த பொருட்களை விற்கும் நபர்கள் / தயாரிப்பாளர்கள் மீது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை துணை ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

5. நடப்பு ஆண்டில் டிசம்பர் 24ந் தேதி தேசிய நுகர்வோர் தினம் மற்றும் 2009 மார்ச் 15ஆம் தேதி உலக நுகர்வோர் தினத்திற்கான தலைப்பாக "உணவு பாதுகாப்பு" ( Food Safety) தரப்பட்டுள்ளது. எனவே உணவு கலப்படத்தை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும், தரமான உணவு பொருட்கள் எவ்வாறு இனம் கண்டு வாங்க வேண்டும் என்பது குறித்த கல்வியறிவை அனைத்து தரப்பு மக்களுக்கும் பெறுவதற்கு ஏதுவாக பத்திரிக்கை வாயிலாக செய்தி வெளியிட்டும், அடிக்கடி தீவிர ஆய்வு செய்து கலப்பட பொருட்களை பறிமுதல் செய்து உரிய குற்றவியல் நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சி மற்றும் பொது சுகாதாரம் & நோய் தடுப்பு துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

6. சென்ட்ரல் புறநகர் ரயில்வே ஸ்டேஷன், சென்னை அரக்கோணம் மார்க்கத்திலுள்ள ரயில் நிலையங்கள் மற்றும் பெங்களூர் & திருப்பதி செல்லும் ரயில்கள் ஆகியவைகளில் அடிப்படை வசதிகள் குறிப்பாக குடிநீர், கழிப்பிட வசதிகள் மற்றும் பராமரிப்பு ஆகியன செய்து தரப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டது. இந்நிலைமையை சீர் செய்ய தென்னக ரயில்வே கேட்டுக் கொள்ளப்பட்டது.

7. கூட்ட முடிவில், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் வட சென்னை மாவட்டத்தில் 7 இடங்களில் சுமார் 350 குடியிருப்போர் நல சங்க உறுப்பினர்களுக்கு நுகர்வோர் உரிமைகள் & கடமைகள் மற்றும் பாதுகாப்பான உணவு ஆகியவைகள் குறித்து முன்னோடி நுகர்வோர் அமைப்பின் ஒத்துழைப்புடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து குடியிருப்போர் நல சங்கங்களை ஒருங்கிணைத்து 25/10/2008 அன்று ஜவகர்லால் நேரு உள்

3. எரிவாயு உருளை வழங்கலில் குறிப்பாக சிலிண்டர் டெலிவரி செய்யும் பணியாளர்கள் கூடுதலாக பணம் கேட்பது போன்ற பல புகார்கள் வருவதாக தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து இலவச தொலைபேசி வசதி மூலம் புகார்தாரர் தனது புகாரினை கீழ்கண்ட எண்ணெய் நிறுவன எண்களில் பதிவு செய்ய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

   IOC 1800 – 233555
   BPC 1800 – 222725
   HPC 1800 - 233777

4. குழந்தைகளுக்கான பொம்மைகளில் மெலமின் என்கிற நச்சுப் பொருள் இருப்பதாக கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான பொருட்கள் எவையென கண்டறிந்து அந்த பொருட்களை விற்கும் நபர்கள் / தயாரிப்பாளர்கள் மீது நுகர்வோர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை இணை ஆணையர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

5. நடப்பு ஆண்டில் டிசம்பர் 24ந் தேதி தேசிய நுகர்வோர் தினம் மற்றும் 2009 மார்ச் 15ஆம் தேதி உலக நுகர்வோர் தினத்திற்கான தலைப்பாக "உணவு பாதுகாப்பு" ( Food Safety) தரப்பட்டுள்ளது. எனவே உணவு கலப்படத்தை கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவும், தரமான உணவு பொருட்கள் எவ்வாறு இனம் கண்டு வாங்க வேண்டும் என்பது குறித்த கல்வியறிவை அனைத்து தரப்பு மக்களுக்கும் பெறுவதற்கு ஏதுவாக பத்திரிக்கை வாயிலாக செய்தி வெளியிட்டும், அடிக்கடி தீவிர ஆய்வு செய்து கலப்பட பொருட்களை பறிமுதல் செய்து உரிய குற்றவியல் நடவடிக்கை எடுக்க சென்னை மாநகராட்சி மற்றும் பொது சுகாதாரம் & நோய் தடுப்பு துறையினர் கேட்டுக் கொள்ளப்பட்டனர்.

6. சென்ட்ரல் புறநகர் ரயில்வே ஸ்டேஷன், சென்னை அரக்கோணம் மார்க்கத்திலுள்ள ரயில் நிலையங்கள் மற்றும் பெங்களூர் & திருப்பதி செல்லும் ரயில்கள் ஆகியவைகளில் அடிப்படை வசதிகள் குறிப்பாக குடிநீர், கழிப்பிட வசதிகள் மற்றும் பராமரிப்பு ஆகியன செய்து தரப்படவில்லை என புகார் தெரிவிக்கப்பட்டது. இந்நிலையை சீர் செய்ய தென்னக ரயில்வே கேட்டுக் கொள்ளப்பட்டது.

7. கூட்ட முடிவில், உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை சார்பில் வட சென்னை மாவட்டத்தில் 7 இடங்களில் சுமார் 350 குடியிருப்போர் நல சங்க உறுப்பினர்களுக்கு நுகர்வோர் உரிமைகள் & கடமைகள் மற்றும் பாதுகாப்பான உணவு ஆகியவைகள் குறித்து முன்னோடி நுகர்வோர் அமைப்பின் ஒத்துழைப்புடன் பயிற்சி அளிக்கப்படுகிறது. அனைத்து குடியிருப்போர் நல சங்கங்களை ஒருங்கிணைத்து 25/10/2008 அன்று ஜவகர்லால் நேரு உள்

விளையாட்டு அரங்கில் விழிப்புணர்வு பயிற்சி நடத்தபடவுள்ளது. இதே போன்று சென்னை மற்றும் புறநகர் பகுதிகளில் உள்ள கல்லூரி / பள்ளிகளில் செயல்பட்டுவரும் குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களை ஒருங்கிணைத்து 15/11/2008 அன்று நுகர்வோர் திருநாள் நுங்கம்பாக்கம் MOP வைஷ்ணவா கல்லூரியில் நடத்தப்படவுள்ளதாகவும் ஆணையாளர் தெரிவித்தார். நுகர்வோர் உரிமைகள் மற்றும் தேவைக்கேற்ற நுகர்வு (Sustainabie Consumption) ஆகிய தலைப்புகளில் மாணவர்களுக்கு போட்டிகள் நடத்தப்பட்டு, சிறந்த மாணவர்களுக்கு பரிசும், சிறந்த குடிமக்கள் நுகர்வோர் மன்றங்களுக்கு விருதும் வழங்கப்படவிருக்கின்றது. நுகர்வோர் தொடர்புடைய அரசு துறை மற்றும் நிறுவனங்கள் இந்த விழாவில் கலந்துக் கொண்டு தங்களது துறைகளின் நுகர்வோர் சேவை குறித்த விபரங்களை அரங்கு அமைத்து காட்சிப்படுத்தி நுகர்வோர்களுக்கு விழிப்புணர்வு எற்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார்.

8. மாநிலத்தின் நுகர்வோர் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு ஒருங்கிணைப்பு துறையான உணவுப் பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் இணைய தளமான www.consumer.tn.gov.in - ஐ நுகர்வோர் அனைவரும் பயன்படுத்தும் வண்ணம் அதில் அனைத்து வகை புகார்களையும் நேரடியாக பதிவு செய்ய வசதி (Online Consumer complaint facility) செய்யப்பட்டுள்ளது. மேலும் புகார்களை consumer@tn.nic.in என்ற முகவரிக்கும் மின்அஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கலாம் என கூட்டத்தின் தலைவர் (ம) உணவு பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் ஆணையர் தெரிவித்தார்.

9. தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுடனான காலாண்டுகூட்டத்தில் நுகர்வோர் தொடர்பு கொள்ளும் ஒவ்வொரு அரசு துறை / நிறுவனங்கள் தவறாது நடத்த வேண்டும் இதனால் பெரும்பாலான பிரச்சினைகளை உடனடியாக தீர்வு செய்திடலாம் என ஆணையாளர் வலியுறுத்தினார். மேலும் நுகர்வோர் சம்பந்தப்பட்ட முக்கிய தகவல்கள் ஆலோசனைகளை மாதந்தோறும் செய்தி வெளியீடு மூலமாக தெரிவிக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டனர்.

கூட்டத்திற்கு வருகைபுரிந்த தன்னார்வ நுகர்வோர் அமைப்பினருக்கும், அரசு துறை/ நிறுவனங்களின் அதிகாரிகளுக்கும் சென்னை மாவட்ட நுகர்வோர் பாதுகாப்புக் குழுவின் தலைவர் நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவுற்றது.

ஆணையாளர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9